உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, ஆடி } மலர் ௪

க. பரணர் என்னும் ஆராய்ச்சிநூல் 121
வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்

உ. கருதலளவைப்பகுதி 129
திரு. த. இராமநாத பிள்ளை அவர்கள்

ங. திருவாதவூரர் திருவாய்மொழி 137
திரு. வித்துவான். வீ. குமாரசாமிஐயர் அவர்கள்

௪. பெருங்காற்றும் மின்னலும் இடியும் 141
திரு. K. கோவிந்தன் அவர்கள்

ரு. ஏமநல்லூர் என்னும் வைப்புத்தலம் 145
திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள்

சா. பெண்ணின் பெருமை 147
திருவளர் செல்வி. R. மங்கையர்க்கரசி

எ. செருத்துணையாரும் புகழ்த்துணையாரும் அவதரித்த திருப்பதிகள் 155
திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள்

அ. ஒரு துயரம் 159

கூ. நன்கோடை 160
பொழிற்றொண்டர்.

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰உ	தாது, ஆடி	மலர் ௩

உ

பரணர் என்னும் ஆராய்ச்சிநூல்

திரு. வித்துவான், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்தரக்கலாசாலை, திருவத்திபுரம்

பரணர் என்னும் ஆராய்ச்சிநூல், "பரணர் பாட்டுக்கள்" என்ற பகுதியின்கண், செய்த ஆராய்ச்சிகளுள் சில பொருந்தா என்பது, "வெண்ணெலரிநர்" என்று தொடங்கும் நற்றிணைப் பாட்டினை யாராயுமுகத்தால், முன்னைய கட்டுரைகளில் (மலர் ௬ ௰) காட்டப்பட்டது அறிஞர்கள் அறிந்ததாகும். இனி, அக் கட்டுரையின் முடிப்புரையில் தோற்றுவாய் செய்தவாறு, இந் நூல் ஆராயும் "இலக்கண வேறுபாடு" என்னும் பகுதியினை ஆராய்வாம். அறிஞர்கள் ஈண்டுக் கூறுவனவற்றைச் சீர்தூக்கி உண்மை துணிந்து உரைப்பார்களாக.

இந்நூலாசிரியராகிய திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள், "பெரும் புலவராகிய பரணர் தம் செய்யுட்களின் அமைதி, தொல்காப்பியத்திற்கு மாறுபடுகின்றது..........உயர்திணைப் பெயர்களில், இரண்டாம் வேற்றுமையுருபு விரிந்தே வருதல் வேண்டும் என்பது 'உயர்திணைமருங்கின் ஒழியாது வருதலும்' (தொல். தொகை. 15) என்னும் இரண்டாம் வேற்றுமைச் சிறப்பு விதிச் சூத்திரத்தால் பெறப்படும். அங்ஙனமாகவும், பரணர் செய்யுட்களில் 'வேந்தரோட்டிய ஏந்துவேல் நன்னன்' (நற். 270) என இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்குவந்துளது........'உருவக் குதிரை மழவரோட்டிய' (அகம். 1) என்று மாமூலர் பாடியிருப்பதும் இது போன்றதே. இவ்வாறு வருதலைக் கண்டே நன்னூலார், 'உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும்' என்று இலக்கணம் அமைப்பாராயினர்" என்று கூறுகின்றார்கள்.

கூறவே, ஆசிரியர் தொல்காப்பியனார், இரண்டாம் வேற்றுமை யுருபாகிய ஐயுருபு, உயர்திணைப் பெயரிடத்து விரிந்தே வருதல் வேண்டும் என்று விதித்தார் என்பதும், பரணர், மாமூலர் முதலிய நல்லிசைப் புலவர், அவ்விலக்கண விதிக்கு மாறுபட்டு, உயர்திணைப் பெயரிடத்து அவ்வுருபு தொக்கு வரச் செய்யுள் செய்தனர் என்பதும் பெறப்படும். மேலும், அவ்வாறு வருதலே நேரிது; தொக்குநின்றவழிப் பொருள் இனிது விளங்காது என்பது திரு. ரெட்டியாரவர்கள் கருத்து. இது, "வேந்தரோட்டிய ஏந்துவேல் நன்னன்" என்னும் அடியைப் படிக்கும் பொழுது, வேந்தரையோட்டிய நன்னன் எனப் பொருள் தோன்றுதல் அரிது" என்று கூறுவதால் அறியப்படுகிறது. அன்றியும், தொல்காப்பியனார் கூறுதற்கு மாறாகப் பரணர் முதலியோர் செய்யுள் செய்தாராயினும், அச்செய்கை பிற்காலத்தார்க்கு இலக்கணமாம் என்னும் கருத்தினால், நன்னூலார், "உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும்" வரும் என எடுத்துக் கூறினர் என்பதும் இவர் கூறியவாற்றால் தெளியப்படும். இக் கூறியவாற்றால், பரணர் செய்யுட்கள், தொல்காப்பியத்துக்கு மாறாகவும், நன்னூலிலக்கணத்துக்கு ஒப்பவும் நிற்றல் பெறப்படும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் "உயர்திணைமருங்கின் ஒழியாது வருதலும்" என எழுத்ததிகாரத்து விதித்தவர், சொல்லதிகாரத்து, "ஆடூஉவறிசொல், மகடூஉவறிசொல், பல்லோரறியும் சொல்லொடுசிவணி, அம்முப்பாற்சொல் உயர்திணையவ்வே" (சூ.உ) என்றும், பொருளதிகாரத்து, "தன்னும் அவனும் அவளும் சுட்டி" (சூ.36.) என்றும் கூறிய சூத்திரங்களுள், உயர்திணைப் பெயரிடத்து ஐயுருபு, தொக்குவரக் கூறியிருக்கின்றனர். எழுத்ததிகாரத்து வகுத்த விதிக்குமாறுகப் பிறண்டுத் தாமே கூறுதல், விதியும் செய்கையும் ஒவ்வாமை கூறலாகிய குற்றம் ஆசிரியர் தொல்காப்பியனார்பால் எய்துவதாயிற்று. திரு. ரெட்டியாரவர்கள் அடிக்குறிப்பில் (Footnote) "ஆடூஉவறிசொல் என்று ஆசிரியர் கூறியிருத்தலின் இஃது அமையும் என்பர்" என்று குறித்தனர் (பக். 162.) இதன்கண், "என்பர்" எனப் பிறர்மேல் வைத்துக் கூறியிருத்தலின், அஃது அவர்க்கும் உடன்பாடன்று என்பது துணியப்படும். மேலும், அவ்வாறு தொக்கு நிற்பக் கூறுதல் சிறவாது என்பது தமக்குக் கருத்து என்பது எய்தவே திரு. ரெட்டியாரவர்கள் 'வேந்தரோட்டிய ஏந்துவேல்' நன்னன் என்பதைப் படிக்கும்பொழுது வேந்தரை யோட்டிய என்றும் பொருள் தோன்றுதல் அரிதாகின்றதென்று கூறினர் என்பதும் அறியப்படும். படவே, ஐயுருபு உயர்திணையிடத்து விரிந்து வருதலே நேரிது என்பதும், தொக்குவர ஆசிரியர் தொல்காப்பியனாரே கூறினும், அஃது அவ்விலக்கண விதிக்கு முரணியதே என்பதும் திரு. ரெட்டியாரவர்கள் கருத்தாம்.

இனி, நன்னூலார் ஐயுருபு உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும்வரும் என்று கூறியது நேரிது என்று திரு. ரெட்டியாரவர்கள் கருதுவர். நன்னூலார் கூற்றின் தகுதி நிலையினை ஆராயாது, "உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும் என்று இலக்கணம் அமைப்பாராயினர்" என்று கூறியொழிந்தமையே, அவர்க்கு அது கருத்தென்பது துணியப்படும். ஐ முதலிய வேற்றுமையுருபுகள் தம்மையேற்கும் பெயர்களின் ஈற்றில் விரிந்தும் தொக்கும் தம்பொருளையுணர்த்தும் என்பது பண்டைய ஆசிரியன்மார் அனைவர்க்கும் ஒப்ப முடிந்தது. இது

வேற்றுமைகளின் பொது விலக்கணமாகும். ஆகவே, ஐயுருபு தானும், இவ்விலக்கண நெறியால், தன்னையேற்கும் பெயரது ஈற்றில்விரிந்தும் தொக்கும்வரும் இலக்கணத்ததாகவின், இஃது "உயர்திணையிடத்து விரிந்தும் தொக்கும்" வரும் என்று நன்னூலார் எடுத்துக் கூறுவதால் பயன் என்னை? அஃறிணையிடத்தும் இப்பெற்றியாகவே வரும் இலக்கணத்ததாகிய இதனை உயர் திணைக்கே உரியது போலக் கூறுதல் குற்றம் அன்றோ? "சொல் பல நாட்டைத் தொல்கவி னழித்த" (பதிற்.43) என அஃறிணையிடத்து ஐயுருபு விரிந்தும், "காரெதிரகானம் பாடினேமாக" (புற. 144) எனத் தொக்கும் வருதல் காண்க.

ஆகவே, உயர்திணையிடத்து ஐயுருபு விரிந்தே வரும் என்று விதித்த ஆசிரியர் தோல்காப்பியனுர் ஏனை நூற்பாக்களில் (சூத்திரங்களில்) அது தொக்குவரக் கூறியதனுல், விதியும் செய்கையும் ஒவ்வாமையாகிய குற்றம் அவர்பாலும், இருதிணைப் பெயரிடத்தும் விரிந்தும் தொக்கும் வாற்பாற்றாகிய ஐயுருபு, உயர் திணையிடத்து விரிந்தும் தொக்கும் என வரைந்து கூறிய குற்றம் நன்னூலார் பாலும் கிடைக்கின்றது என்பது இவ்வாராய்ச்சியால் பெறப்பட்டமையின், இவற்றுள், தொல்காப்பியத்தின் உண்மை நிலையினை ஈண்டு ஆராய்வாம்.

மக்களுடைய மனவுணர்வு நாளும் வளர்ந்து விரியும் இயல் பிற்று; அதனை வெளிப்படுக்கும் சிறப்புடைக் கருவியாகிய சொற்றொகுதியும் விரிந்து பல்கும் இயல்பினதாகும். ஆகவே, அதன் முடிபு வகைகளும் பலவாய் விரிதல் பெறப்படும். அவற்றை வரைந்து, திணிந்த முடிபுவகைக்கண் அடக்கலுறின், அவ்வளர்ச்சி குன்றும். ஆகலின், அவ்வாறு பெருகிப் பல்கும் முடிபுவகைகள் அவ்வளர்ச்சி கெடாது அடங்குதற்கேற்ப, அவற்றை ஒரெல்லைக்குள் நிறுத்தி, அழகுறவமைக்கும் இலக்கண விதிகள், "பலவகையானும் பயன் தெரிபுடைய"வாய் அமைந்திருத்தல்வேண்டும். அவை, இலேசு, உத்தி என்பன முதலாகக் கூறப்படும். அவற்றிற்கு உரைகாணப்புகும் புலவர் பெருமக்கள், அவ்வமைதியின் ஒட்பம் தேர்ந்து வேண்டுமாற்றால் அமைப்பது கடனாகும். இவ்வமைதி "அளக்கலாகாவரும்

பொருட்டாகிப், பல்வகையானும் பயன் தெரிபுடையது, சூத்திரத் தியல்பு'' என்றும், “சூத்திரத்துப் பொருளன்றியும் யாப்புற, வின்றியமையாதியைபவை யெல்லாம், ஒன்றவுரைப்பது உரையெனப்படுமே'' என்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுமாற்றால் உணரப்படும். படவே, உயர்திணையிடத்தும் விரிந்தும்தொக்கும் வரும் இயல்பிற்றாகிய ஐயுருபு, தொக்குநின்ற வழித் தன்பொருளைத் தெள்ளிதின் உணர்த்தும் சீர்ப்பாடின்மை கருதி, “உயர்திணையிடத்து ஒழியாது வருதலும்'' என்றாராயினும், தொக்குநின்று முன்னும் பின்னும் அடுத்துவரும் சொற்றொகுதியால், தன் பொருளையுணர்த்தும் சீர்ப்பாடு எய்துமாயின், அது விலக்கப்படாதாம். ஆகவே, அதனையும் அடக்குமாறு சூத்திரம் அமைந்திலதாயின், அதன் இயல்பு குன்றுதலின், அதுவும் அடங்குதற்கு, விரிந்தே வருதலும் என்னாது, ''ஒழியாது வருதலும்'' என்று ஆசிரியர் கூறுவாராயினர். ஆகவே, அவர்பால் முன்கண்ட குற்றமின்மை பெறப்படும். அவ்வுண்மை தோன்றவே, சொல்லதிகாரத்தும், பொருளதிகாரத்தும் ஒரு சில சூத்திரங்களுள் உயர்திணையிடத்து ஐயுருபு தொக்குவரக் கூறினர் எனக் கோடல்வேண்டும்.

இப்பெற்றித்தாய அமைதியொடுதிகழும் இலக்கணநெறியின் இயற்கை நலங்களை முற்றவுணர்ந்த ஆசிரியர் பரணர் முதலாயினர், தம் பாட்டுக்களில் ஐயுருபு தொக்குவரவும் பாடினர் என வுணர்தல் வேண்டுமேயன்றி, அவர் கூறியன, இலக்கண முடிபு காட்டும் தொல்காப்பியத்துக்கு மாறுபட்டனவாம் என்றல் நிரம்பாதாம். இந்நெறிமையின் ஒட்பங்களை யுணர்ந்தே உரையாசிரியன்மாரும், இன்னோரன்னவற்றை இலேசினானும் உத்தியானும் பிறவற்றானும் அமைத்துக் காட்டுவாராயினர். இவ்வியல்பு காணமாட்டாத ஆராய்ச்சியாளர் சிலர், “சூத்திரத்துட் கூறுவனவே பொருளாவன; உரையாசிரியன்மார் உரையிற் கொணர்ந்து காட்டுவன ஆகா'' என்று கருதுவர். இக்காலத்து நம் நாட்டில் வழங்கும் வழக்குநூல் (Civil, Criminal, Constitutional and other laws of our Country) களின் அமைப்பினையும், அவற்றின் பொருள் காணும் திறங்களையும் தெரிந்துணர்ந்த

அறிஞர், இலக்கண நூல்கட்கு உரைகாரர்கள் காட்டும் உரைத் திறம் அறிவின் இயற்கைநிலையோடு இயைந்ததென்றே கூறுவர். இலக்கணமும் வழக்கு நூலேயாகும்.

ஆகவே, தமிழ்ச்சொற்றொகுதிக்கட்படும் முடிவுவகை பலவும் தன்பால் அடங்கியமையுமாறு தொல்காப்பியமாகிய பேரிலக்கணப் பெருமணி நின்று திகழ்கின்றமையின், அம்மணியொளி கொண்டு, சொற்பொருளின் நுட்பங்களை நுனித்துணர்ந்து தேர்ந்து நல்லிசைப்புலமை நிரம்பிய ஆசிரியர் பரணர் முதலாயினரது உள்ளம், அந்நூல் நெறியே பயின்ற பயிற்சி வன்மையுடையதாகலின், அதன்கட்டோன்றும் சொன்முடிபுகள் அந்நூன் முடிபுக்குமாறுதல் கூடாமையின், அவர் உள்ளத்துப் பிறந்து சொல் வடிவுபெற்றுப் போதந்த அவர் செய்யுட்களின் சொற்பொருள் முடிபுகளும், தொல்காப்பிய இலக்கணங்கட்கு மாறுபட்டன என்று கோடல் நிரம்பாதென்பது உணரப்படும்.

இனி, பரணர் என்னும் இவ்வாராய்ச்சிநூல் கூறும்வேறோர் இலக்கண வேறுபாட்டினை யாராய்ந்து காட்டி, இக்கட்டுரையின் இப்பகுதியினை முடிக்கின்றாம்.

"பனைத்திர ளன்ன பரேரெறுழ்த் தடக்கை" (அகம். 148) என்னும் அடியில் பனைத்திரள் என்பது பனந்திரள் என வருதலே யமைதி. இது, "பனையும் அரையும்" (தொல். உயிர். 81) என்னும் சூத்திரத்தால் அறியலாகும். ஆயின், 'ஐகாரவிறுதிப் பெயர்நிலை முன்னர், வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகுமே, (உயிர். 78) என்னும் பொது விதியான், பனைத்திரள் என வந்ததால் எனின், ஆசிரியர் பனையென்னும் சொல்லைக் குறித்து' மூன்று சூத்திரங்களில் (உயிர் 81-83) சிறப்புவிதி கூறுகின்றாராகலானும், பொதுவிதி சிறப்புவிதியால் கெடுமாகலானும், அஃது அமையாது என்க. அன்றியும், ஆசிரியர் பனைக்கொடியென வருதல் கண்டு, அதனை, 'கொடிமுன் வரினே ஐயவண் நிற்பக், கடிநிலையின்றே வல்லெழுத்து மிகுதி' (உயிர். 83) என்று விதி கூறி அமைத்தாற்போல, பனைத்திரள் என வருதலைக் கூறியமைத்தாரல்லர். இதனால், பனைத்திரள் என வருதல் ஆசிரியர்

கருத்தன்மையுணர்க. 'பனந்துணி' (புறம். 35), 'பனங்குடை' (புறம். 177) என வருதல் ஈண்டு அறியத்தகும்'' என்று திரு. ரெட்டியாரவர்கள் கூறுகின்றார்கள்.

இதனால், பனைத்திரள் என்பதனைப் பொதுவிதியால் முடித்தலினும், சிறப்புவிதியால் முடித்தலே அமைதியென்பதும், பனைத்திரள் என்பது ஆசிரியர் கருத்தன்று என்பதும் அவர் கருத்தாதல் பெறப்பட்டது.

பனைத்திரள் என்பது பொதுவிதியால் முடிந்ததென்றல் அமையாது என்பது திரு. ரெட்டியாரவர்களின் மேற்கோள். இதற்கு அவர் கூறும் ஏது, ''ஆசிரியர், பனையென்னும் சொல்லைக் குறித்து மூன்று சூத்திரங்களில் (உயிர். 81-83) சிறப்பு விதி கூறுகின்றார்'' என்பதும், ''பொதுவிதி சிறப்புவிதியால் கெடும்'' என்பதுமாகும்.

''இவர் காட்டும் பொதுவிதி, ''ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர், வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகுமே'' என்பது. ஐகார வீற்றுப் பெயர்ச் சொற்களின் முன், வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வல்லெழுத்துமிக்கு முடியும் என்பது இதன் பொருள். ''பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும், நினையுங் காலை அம்மொடு சிவணும், ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே, மெய்யவணொழிய என்மனார் புலவர்'' என்பது ஒரு சிறப்புவிதி. பனை, அரை, ஆவிரையென்னும் சொற்கள் அம்முப்பெற்று முடியும் என்பதும், அதுபோது, இவற்றுள், அரையென்பது ஒழிய, ஏனைய இரண்டின் ஈற்று ஐகாரம், தான் நின்ற மெய்யொழித்துக் கெடும் என்பதும் இதன் பொருளாகும். ''பனையின் முன்னர் அட்டுவருகாலை, நிலையின்றாகும் ஐயென் உயிரே, ஆகாரம்வருதல் ஆவயினான'' என்பதுவேறொரு சிறப்புவிதி. பனையென்னும் சொல்முன் அட்டுஎன்னும் சொல் வந்து புணரின், பனையின் ஈற்று ஐகாரம் நில்லாது என்பதும், அவ்விடத்து, ஆகாரவுயிர் வந்து, பனா அட்டு என முடியும் என்பதும் இதன் பொருளாகும். ''கொடிமுன் வரினே ஐயவண் நிற்பக், கடிநிலையின்றே வல்லெழுத்து மிகுதி'' யென்பது மூன்றாவது சிறப்புவிதி. பனையென்னும் சொல் முன் கொடியென்னும்

சொல் வந்து புணரின், பனைக் கொடியென வல்லெழுத்துமிக்கு முடிதல் நீக்கப்படாது என்பது இதன் பொருளாகும்.

இனி, இவ்விதிகள் செய்யும் செய்கையினை யாராய்வாம். "ஐகாரவிறுதி" யென்னும் பொது விதியாற் போந்த வல்லெழுத்துமிகுதி, "பனையும் அரையும்" என்னும் சிறப்புவிதியால் கெட, பனையென்னும் சொல் அம்முப்பெறுதலும், ஐகாரம் கெடுதலும் பெறுதல் எய்திற்று. இச்சொல், "அட்டுவருகாலை" யென்னும் சிறப்புவிதியால், முன்பெய்திய ஐகாரக்கேடும், (அம்முப்பறு விலக்கி,) ஆகாரப்பேறும் பெறுதல் எய்திற்று. எய்தவே, "பனையும் அரையும்' என்னும் சிறப்பு விதியால் எய்திய அம்முப்பேறு, ஐகாரக்கேடு என்ற இரண்டனுள், பின்னர்ப் போந்த சிறப்புவிதி, அம்முப்பேற்றை விலக்கியவாறு காண்க. "கொடி முன்றரினே" என்னும் சிறப்புவிதி, முன்னைய சிறப்பு விதிகளாற் போந்த, ஐகாரக்கேடு, அம்முப்பேறு' ஆகாரப்பேறு ஆகிய மூன்றையும் விலக்கி, பொதுவிதியால் எய்தும் வல்லெழுத்து மிகுதியினையே வற்புறுத்துவதாயிற்று. ஆகவே, ஒன்றனையொன்று விலக்கிப் போதரும் சிறப்பு விதிகள் தாமும் முடிவில், பொதுவிதி கூறும் முடிபினையே வற்புறுத்துதலின், அவை வருமொழி நோக்கியவாயும், நிலைமொழிக் குரியவாயும், வந்தனவாயினும், பனையென்னும் சொல்பொது விதியால் முடிபு பெறுதலை நீக்கும் வன்மையிலவென்பது பெறப்படும். படவே, பனையென்னும் இச்சொல், பொதுவிதியால் முடிதல் அமையாது என்றல் நிரம்பாதாம்.

(தொடரும்)

கருதலளவைப் பகுதி

திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள், சாவகச்சேரி, இலங்கை

5-ம் அதிகாரம்

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 3. பக்கம் 89.)

சம்பா வித அந்நுவயங்கள் Conditional Syllogisms.

1. சம்பா வித தாட்டாந்தம்.

இதுகாறும் சுத்தசுயம் பித அந்நுவயங்களைப்பற்றி விளம்பினும். சுயம்பித தாட்டாந்தமென்பது இயன் மொழியாக மொழியுந் தாட்டாந்தங்கள். அவை இயல்புத் தொடர்பையே உணர்த்துவன. இனிக் காரண காரியத் தொடர்பை உணர்த்தும் சம்பவ தாட்டாந்தங்களையுடைய அந்நுவயங்களை ஆராய்வாம்.

சம்பவ தாட்டாந்தம் எ—வி ஆனல் எ—வ ஆகும், ஒரு முக்கோணம் மூன்று சமகோடுகளால் ஆக்கப்பட்டதாயின் அதன் மூன்று கோணங்களும் சமன். எ—வி ஆனல் வ—ல ஆகும்.

மழை பெய்தால்—நெல் விளையும்.

பிராணிகள் ஒருஅண்டத்தில் உண்டாயின் அங்கே பிராண வாயு உண்டு.

ஐயத்தை உணர்த்தும் தாட்டாந்தம் வியோக தாட்டாந்தமெனப்படும்.

எ—வி அன்றேல் வ: எகரம் விகாரமாகவேனும் வகரமாக வேனும் இருக்கும். எ—வி அன்றேல் வ—ல. எகரம் விகரமாக வேனும் வகரம் லகரமாகவேனும் இருக்கும்.

2. சம்பாவித அந்நுவயங்கள் மூவகை.

(அ) பூருவ உத்தர சாதனங்கள் ஆகிய மூன்றும் சம்பாவிதமாயின், சுத்த சம்பாவிதமாகும்: இவற்றால் ஒரு பயனுமில்லை.

(ஆ) பூர்வ சாதனம் சம்பாவிதமாகவும் உத்தரம் சுயம்பித மாகவும் இருப்பன. இவற்றை ஈண்டு ஆராய்வாம்.

(இ) சம்பாவித தாட்டாந்தங்களேயும் வியோக தாட்டாந் தங்களேயும் உடையன. இவை இருதலைப்படுதல். சம்பாவித தாட்டாங்கள் எல்லாம் பொதுத் தாட்டாந்தங்கள்:

1. எ—வி ஆகின் வ—ல ஆகும்
எ—வி ஆகின்றது வ—ல ஆகும்

காரணம் உண்டெனின் காரியம் துணியப்படும்.

2. எ—வி ஆகின் வ—ல ஆகும், வ—ல அல்ல.
எ—வி அல்ல காரியம் இல்லை ஆதலின், காரணமும் இல்லை. ஈண்டுக் காரணமும், காரியமும் நீக்கமின்றி நிற்கும் முன் னிகழ்ச்சி பின்னிகழ்ச்சியாக எண்ணப்பட்டன. ஒரு காரணம் ஒரு காரியத்தையே உண்டாக்குமென்பதும் ஒரு காரியத்துக்கு ஒரேயொரு காரணமே உண்டென்பதும் கொள்கைகளாக அநு சரிக்கப்பட்டன. சம்பாவித அந்நுவயங்களில் சாத்தியத்தைத் துணிதற்கு முன்னிகழ்ச்சியை உண்டென்று உடன்பட்டும் பின் னிகழ்ச்சி இல்லை என மறுத்தும்: கருதவேண்டும்.

3. எ—வி ஆகின் வ—ல ஆகும். எ—வி அல்ல.
சாத்தியம் ஐயம்.

மேற்கூறிய கொள்கையை அநுவதிப்பின் வ—ல அல்ல எனத் துணியலாம். ஆனல் ஒரு சாரார் பல வேதுக்கொள் கையை அநுவதிக்கின்றிலர். ஒரு காரியத்திற்குப் பல கார ணங்கள் உண்டாதல் கூடும். எ—வி அல்லவென அறிந்தும் சாத்தியத்தைத் துணியவியலாது. என்னை? வ—ல ஆதற்கு வேறோர் முன்னிகழ்ச்சி நிகழ்ந்திருக்கலாம். அம்முன்னிகழ்ச்சி யின் பயனாய் வ—ல ஆதல் கூடும்.

4. எ—வி ஆகின் வ—ல ஆகும். வ—ல ஆகிற்று.
சாத்தியம் ஐயம். பலவேதுக்கொள்கையை அநுவதிப்போர் வ—ல ஆதற்கு பலமுன்னிகழச்சி (காரணங்கள்) உண்டென்பா ராகலின், எ—வி என்னும் முன்னிகழச்சிதான் நிகழ்ந்ததெனத் துணியவியலாது.

பலவதுக்கொள்கையை அநுவதியாதோர் நான்கு அந்நுவயங்களுக்கும் சாத்தியம் உண்டென்பர். அது பெருத்தமாகும்.

உதாரணங்கள்.

முதலாவதற்கு உதாரணம்:—பிராணவாயு செவ்வா யண்டத்தில் உண்டாயின், அங்கே சீவ பிராணிகள் உண்டு. பிராண வாயு அங்கு உண்டு. ஆகையால் செவ்வாயண்டத்தில் சீவ பிராணிகள் உண்டு.

இரண்டாவதற்கு உதாரணம்:—செவ்வாயண்டத்தில் சீவ பிராணி வளர்வது கூடுமாயின், அவ்வண்டத்தில் சீவபிராணிக் கேற்ற வெப்பம் உண்டாகும். ஆனால் அங்கே வெப்பமில்லை. ஆகையால் அங்கே சீவ பிராணிகளில்லை.

மூன்றாவதற்குதாரணம்:-(யெவன்ஸ் கூறியது) தருக்கநூல் ஏனைய ஆராய்ச்சி நூல்கள் போல இயற்கைப் பொருட்களின் உண்மையைக் கற்பிக்குமாயின், கற்கத்தகுந்த நூலாகும். தருக்க நூல் இயற்கைப்பொருட்களைப்பற்றி யாதொன்றுஞ்சொல்லாது; ஆகையால் தருக்கநூலைக் கற்கக் கூடாதென மொழிதல் போலி யாகும். கற்றற்குரிய நூலாவதற்குப் பல பூதப்பொருட் குணங் களை எடுத்தோதவேண்டியதில்லை. சிந்திக்கும் முறைகளில் புத்தி யைப் பயிற்சிக்குமாயின் அது கற்றற்குரிய நூலாகும்.

நாலாவதற்கு உதாரணம்:—கயவர் அறச் செயல்களில் செலவுசெய்யார். இம்மனிதன் அவ்வாறு செலவுசெய்கிறானில்லை. ஆகையால் இவன் கயவன் என்பதுபோலி. கயமை காரணமாக அன்றி வேறோர் காரணமாகவும் செலவு செய்யாமல் இருக்க லாம், பொருள் இல்லாமலும் எற்போர் தகுதியற்றோராகவும் இருக்கலாம்.

3. வியோக அந்நுவயங்கள் Disjunctives.

அ. எ—வி அன்றேல், ல, எ—வி ஆகவேனும் ல ஆக வேனும் இருக்கும். எ—வி என்பதை அறிவோம். சாத்திய மில்லை, எ—ல ஆகவும் இருக்கலாம். எ—வி அன்றேல், ல எ—ல சாத்தியமில்லை அன்றேல் என்பது நடுவை நீக்காதசொல் எ—வி யாகவும் ல வாகவும் இருத்தல்கூடும் எ—வி அன்றேல்,ல.

ஆ. எ—வி அல்ல அ—ல ஆகும். எ—வி அன்றேல் ல எ—ல அல்ல எ—வி யாகும். அன்றேல் என்பது இரண்டில் ஒன்றை நீக்காது அல்லது என்பது. இரண்டில் ஒன்றை நீக்கும் வியோக அந்வயங்களையும் சம்பாவித அந்துவயங்களையும் சத்த சுயம்பிதமாக முதனிலை அந்துயங்களாக மொழியலாம்.

எ—வி ஆகின் ல வாகும் எ—வி ஆகும். எ—ல ஆகும் இவ் வந்துவயத்தை. வி யாகும் எ எல்லாம் ல ஆகும் எ—எல்லாம் வி ஆகும் எ—எல்லாம் ல ஆகும் எ—வி அன்றேல் ல எ—வி அல்ல எ—ல இவ்வந்நுவயத்தை. வி யாகாத எ எல்லாம் ல ஆகும் எ—எல்லாம் வி ஆகா எ—ல ஆகும்.

4. இருதலைப்பாடு Dilemma

இருதலைப்படுதல் அந்நுவயக் காட்சியாகும். பூருவ சாதனம் ஒருகாரணமுடையதாகவும் இருகாரியமுடையதாகவும் இருகாரணமும் இருகாரிய முடையதாகவும் இருத்தல் கூடும். உத்தரசாதனம் ஒரு வியோக தாட்டாந்தமாக இருக்கும். சாத்தியம் சுயம்பிதமாகவேனும் வியோகமாக வேனும் இருக்கும்.

அ. தனியுடன் பாட்டு இருதலைப்பாடு. த—ந ஆக வேனும் ப—ம ஆகவேனும் இருப்பின் வ—ல ஆகும். த—ந அன்றேல் ப—ம என்பது உண்மையாகும். வ—ல உண்மை.

17ம் நூற்றுண்டில் மேனுட்டார் நீதி செலுத்தும் முறை ஒன்றைக் கூறுவாம். ஒருத்தி விஞ்சையளோ (மந்திரகப் பெண்ணோ) அல்லவோவென நிச்சயிக்கும் முறை.

நீரில்தாழ்ந்தால் இயற்கையாகஇறப்பாள்; நீந்தினுல் மாந்திரிகப் பெண்ணெனக் கொல்லப்படுவாள்.

தாழ்தல் நீந்தலில் ஒன்று நிகழும் ஆதல் அவள் சாதல் நிச்சயம்.

ஆ. தனி எதிர்மறை இருதலைப்பாடு. த—ந ஆகின் ப—ம ஆகவும் வ—ல ஆதலும் உண்டு. ப—ம அல்ல அன்றேல் வ—ல அல்ல என்பது உண்மை த—ந என்பது உண்மை. ஒரு பட்டினத்திற்குச் செல்வோனுக்கு வழிச் செலவும் உணவுச் செலவும்

வேண்டும். வழிச் செலவுக்கும் உணவுச் செலவுக்கும் பணமில்லை ஆகையால் பட்டினத்திற்குப் போகான்.

இ. உடன்பாட்டு இருதலைப்படுதல். த—ந ஆகின் ப—ம ஆதலும் ய—ர ஆகின் வ—ல ஆதலும் உண்டு. த—ந அன்றேல் ய—ர உண்மை ப—ம அன்றேல் ய—ர உண்மை ப—ம அன்றேல் வ—ல உண்மை. எரியும் வீட்டினுள் இருந்தானயின் வெந்து சாம்பலாவான். சாளரத்தால் பாய்ந்தானயின் உறுப்பு நொடிந்து இறப்பன் இரண்டில் ஒன்றுசெய்வான். ஆதலில் இறப்பான்.

த—ந ஆயின் ப—ம; ய—ர ஆகின் வ—ல உண்டு ப—ம அல்ல அன்றேல் வ—ல அல்ல த—ந அல்ல அன்றேல் ய—ர அல்ல ஒருவன் விவேகியாகின் தன் பிழையை உணர்வன். நன்மகனயின் மனந்திரும்புவன். இரண்டுஞ் செய்யவில்லை ஆதலில் விவேகியல்லன் அன்றேல் நன் மகனல்லன்

5. போலி இருதலைப்பாடு

உடன்பாட்டு இருதலைப்படுதலை வேறோர் உடன்பாட்டு இருதலைப் படுதலால் மறுக்கலாம். இவ்விரு விரோத இருதலைப் பாடுகளும் போலி. எதெனஸ் நகரத்து வசிக்கும் பெண்தனது மகனை அமைச்சனகாதேயென பின்வருமாறு புத்திமதிகூறினள்.

நீதியாக ஒழுகினயாகின் மக்கள் பகைப்பர்; நீ அநீதியாய் ஒழுகினயாகின் தேவர் பகைப்பர், இரண்டில் ஒன்று செய்வாயாகின் பகைக்கப்படுவாய். இதன் மறுதலையாக மகன் பின்வருமாறு கூறினன். நீதியாக ஒழுகினல் தேவர் நேசிப்பார். அநிதியாக ஒழுகினல் மக்கள் நேசிப்பர். இரண்டில் ஒன்று செய்வேனகையால் நேசிக்கப்படுவேன்.

நீதி அநீதி பகைநேசம் என்பன மாறுகோட் பதங்களல்ல. இரண்டில் ஒன்று செய்தல் என்பது நடு நீக்கா வியோகம். நடு நீக்காத வியோகம் கருதலின் ஒரு குற்றமாகும்.

ஓமர் என்னும் துருக்கவேந்தன் அலெச்சாந்திரிபா நகரத்து வாசக சாலையில் இருதலைப்பட்டு ஆசங்கித்தவாறு காண்க. இவ்

வாசகசாலையில் உள்ள நூல்கள் கோரான் என்னும் மகமதிய வேதத்தோடு உடன்பாடாயின் மிகையாகும்; வேற்றுமையாயின் தீயவையாகும். உடன்பாடாகவேனும் வேற்றுமையாகவேனும் இருத்தல்வேண்டும். ஆதலின் இவ்வாசகசாலையில் ஒரு பயனுமில்லை, ஈண்டு ஓமார் மக்களுக்குவேண்டிய அறிவெல்லாவற்றையும் மகமதிய வேதம் அடக்கியுள்ளதென்று நினைத்தனர். மகமதிய வேதம் மொழியாத பல பொருட்களைப்பற்றி ஏனைய நூல்கள் மொழியுமென்பதை ஓமார் அறிந்திலர். இனி இரண்டு பொருட்கள் பேதமல்லவாகவும் அபேதமல்லவாகவும் இருத்தல் கூடும்.

பின்வரும் கட்டுரையிலுள்ள இருதலைப்பாட்டை ஆராய்க. நீரில் நீந்தி விளையாடும் சிறுவனை முதலை ஒன்று இழுத்துச் சென்றுழி, சிறுவனைத் தருதியென சிறுவனின்தோழன் ஒருவன் வேண்டினனாக, முதலையும் இரங்கி; சிறுவனை விழுங்குவேனோ என்னும் வினாவிற்கு உண்மையாகும் விடையளிப்பாயானால் தருவேனென மறுமொழி கூறியது. தோழன் விடை தெரியாது கலங்கினன். நன்று கலங்கினாய் நீ எவ்விடை கொடுத்தாலும் உனது உரையே சிறுவனைத் தருதற்குத் தடையாகும்; விழுங்குவாய் என்றீரோ உன்னுரை சரியாதற்கு நான் விழுங்க வேண்டும்; விழுங்காய் என்றீரோ உன்னுரை போலியாகுமென மொழிந்து முதலையும் மறைந்தது.

சிலபோலிகள், வழூஉச்சொற் புணர்த்தல், இரட்டுறமொழிதல், மயங்கவைத்தல், முதலியபோலிகள் இலக்கணப்போலிகள். அளவைநூல் விதியினின்று வழுவுதல் அளவைப் போலியாகும்; உடன்கருதற் போலிகள், வகுத்தற்போலிகள், கருதற்போலிகள் முதலியவற்றை ஆண்டாண்டுக் கூறினம். வேதனைக் காட்சிகளில் நிகழும் காட்சிப் போலிகளை வேதனனுமானப் பகுதியில் கூறுவாம். ஈண்டுச் சில சிறந்த போலிகளை எடுத்துக்காட்டுவாம்.

தொகுதிப் போலி (Composition)

அ. இப்போலி பதங்களின் ஈதல் பற்றியது, ஒரு தொகுதிப் பதத்தை முன்னர் ஈந்தும் பின்னர் ஈயாதும் உபயோகித்

தல்போலி உதாரணம். இதைத் தூக்குவாயோ? ஆம் இதையும் தூக்குவாயோ? ஆம். இதையும் தூக்குவாயோ? ஆம். ஆகலால் இவை எல்லாவற்றையும் நீ தூக்குவாய், மில் தம்மொழுக்க நூலில் மொழிந்த நியாயம் போலி.

மக்கள் பெரும்பாலும் இன்பத்தையே நாடிநிற்பர். எல்லா மனிதரும் துன்பத்தை வெறுத்து இன்பத்தையே விரும்புகின்றனர். ஆகையால் எல்லாரும் இன்பத்தையே விழைதலால் மக்கள் சனசமுகமும் இன்பம் விழைவதெனத் துணிதல்போலியாகும்.

பகுதிப் போலி (Division)

ஆ. ஒரு தொகுதிப் பதத்தை முன்னர் ஈயாதும் பின்னர் ஈந்தும் உபயோகித்தல் போலி. நாலும் மூன்றும் ஏழுக்குச் சமன். ஆகையால் நாலு ஒன்றுக்கும் மூன்று ஆறுக்கும் சமன். தமிழர் விவேகிகள் என்புழி தமிழ்ச் சாதியார் பொதுவாக விவேகமுடையவர் என்பது பொருள். ஒவ்வொரு தமிழனும் விவேகியெனக் கருதல்போலி.

கிழமைப் போலி

இ. பிளேற்றோ வேறு. சொக்கிறேற்றிஸ் வேறு. பிளேற்றோ ஒரு மனிதன் ஆகையால் சொக்கிறேற்றிஸ் மனிதனல்ல. நீ ஒருமிருகம் கழுதை ஒருமிருகம் ஆகையால் நியொரு கழுதை. இஃது ஈந்திராமத்தியெனக்காட்டலாம்: கிழமையைப் பண்பாக மயங்குதல் குற்றம். செம்மறிபால் சுரவாது ஆதலின் ஆடுபால் சுரவாது சிறப்புப் பதத்திலிருந்து பொதுப்பதத்திற்கு கருதல் போலி.

ஒன்றனை ஒன்று பற்றுதல்

ஈ. ஒன்றனை ஒன்று பற்றுதல் நிரூபித்தற்குரிய பிரதிக்ஞையை மேற்கோளாக எடுத்துக் காட்டிப் பின்னர் அப்பிரதிக்ஞையை அம் மேற்கோளாதாரமாக நிலைநாட்டல் போலி. மேஞட்டார் கடவுள் உண்டென நிரூபிக்கும் முறை இப்போலியுடையது.

இவ்விநோதமான அமைப்புப் பெற்ற பூமி. முழுதுணர்ந்த அநாதி முத்த சித்துருவாகிய கடவுளால்தான் ஆக்கப்படலாம். பூமி உண்டு ஆகையால் கடவுள் உண்டு. விலைநூலார் ஒரு பண்டத்தின் விலை அதன் தேவையோடு ஏற்றத் தாழ்ச்சியாக மாறுதல் அடையும் என்புழி விலையும் தேவையும் ஒன்றனை யொன்று பற்றி நிற்கும். குணவிரிகுறைதலை பொருள்விரிமிகுதலி லிருந்து நிரூபிக்க வியலாது குணவிரி பொருள்விரி குறைதலும் மிகுதல் ஒன்றனை ஒன்றுபற்றி நிற்கும்.

மற்றொன்று மறுத்தல்

௨. ஒன்றை மறுத்தற்கு அதன் மாறுகோளைக் கூறுமல் வேறொன்றை நாட்டல் போலி. வட மொழிக் கல்வி பயனுடைத்தென்போர் கூறும் நியாயம் ஒன்றிருப்ப, அவர் மொழியாத நியாமமொன்றை மறுத்தல் வடமொழிக் கல்வியால் பயனில்லை என்பதைக் காட்டாது. வடமொழிக்கல்வி புத்தியைப் பயிற்சிக்கிறது, ஆகையால் அதில்பயிலுதல் நன்று. வடமொழிக் கல்வியால் பயனில்லை என்போர் வடமொழிக் கல்வியால் புத்தியாதொரு பயிற்சியையும் பெறமாட்டாதெனக் காட்டல் வேண்டும். அஃதன்றி திரவியங்தேடற்கு அதனல் பயனில்லையென நாட்டல் பொருந்தாது. இது மற்றொன்று மறுத்தலாகும். இனி வடமொழி போன்ற எட்டு வழக்குமொழிகளில் பழகுதல் தமிழருக்கு அவசியமில்லை என்பார் தமிழ்நூலே, அத்தகைய பயிற்சியைத் தருகின்றதெனக் காட்டவேண்டும்.

மேனாட்டு வழக்கறிஞர் நீதிவிசாரணைசெய்யும் நீதிபதியின் முன்னிலையிலும் வழக்கு ஒன்றற்குப் போதிய சான்று இல்லையாயின் எதிரியை இழுத்துப் பேசுதல் வழக்கம். குற்றவாளி தன் எதிரி தூர்த்தனுகையால் தான்சுத்தன் என்பது தவறு. மற்றொன்று மறுத்தலோடு சோம்பல் நியாயம் ஒப்பாகின்றது. மருத்துவனை அழைத்து மருந்துபெற்றாலும் அழையாது மருந்து பெறாதிருந்தாலும் நோய்நீங்குவது விதியாயின் நீசுகமடைவாய். ஆதலின் மருத்துவனை அழைக்க வேண்டாம். ஈண்டுவிதி மருத்துவன் மூலமாக நிகழக் கூடுமென்பதைச் சிந்தித்திலர்.

கேள்விப் போலி (வினுவழு)

௯. நீ அளவுகடா தொழுகிருயா? ஆமென்றேனும் இல்லையென்றேனும் விரைவாக விடையளி. இல்லையென விடையிறுத்தால் நீ முன் அளவு கடந்தாய் என்றும் ஆமெனின் நீதூர்த்தன் என்றும் துணியப்படும்.

காகதாலிய நியாயம் (ஒன்றன் முன்னிகழ்ச்சி ஆதலின் காரம்)

௭. (Post Hoc Ergo Propter hoc) இது வேதனைக் காட்சிப்போலி. முன்னிகழ்ச்சிகள் பின்னிகழ்ச்சிகளுக்குக் காரணமல்ல. பனம்பழம் விழுவதற்குக் காரணம் ஒன்றிருப்ப, காகம் அப்பழத்தின்மேல் குந்தியதால் விழுந்தது என்பதுபோலி. காரணம் நீக்கமின்றி நிற்குந் தொடர்பு.

திருவாதவூரர் திருவாய்மொழி

வித்துவான். வீ. குமாரசாமிஐயர், தமிழாசிரியர், உயர்தரப்பள்ளி, மேலூர்

(முற்ருெடர்ச்சி துணர் 12, மலர் 3, பக்கம் 118)

2. பின்னர், முகில்கள் நீரைப் பொழிதலை நோக்கிப் புனைந்துரைக்குந் திறனைக் காண்பாம்.

முகில்கள் நீரைப் பொழியுங்கால் மின்னல், இடிமுழக்கம், வானவில் ஆகிய இவைகளுண்டாதல் இயல்பாகும். வெண் முகில்கள் கடலைச்சார்ந்து அந்நீரையுண்டு கருநிறமுற்றனவென்றல் கவிமரபு. இதனைப் புலவர்கள் பலவாறு சிறப்பித்துக் கூறுவர். நம் ஞானப் பெருந்தகையார், "கடலின் கண்ணுள்ள நீரைக் கவர்ந்தெழுந்து அம்மையின் திருமேனிபோல் (நீலநிற முற்று) விளங்கி, அவளுடைய நுண்ணிய இடைபோல மின்னலைச்செய்து, எம்பிராட்டியின் திருவடிக்கண்ணுள்ள பொற்

சிலம் பொலித்தல்போல (இடி) முழக்கஞ்செய்து, அவளுடைய திருப்புருவம்போல வானவில்லிட்டு, எம்பெருமானின் பழுத்த மனத்த பழவடியார்க்கு முற்பட்டு வழங்கும் அவளது அருள் போல மழை பொழியாய்.'' என்னும் பொருளமைத்து,

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்
(திருவெம்பாவை-16. செ.)

என்றருளிய உவமை நயஞ்செறிந்த இச்செய்யுளோவியம் பெருமான் மனத்துட் கொண்ட அம்மையின் றிருவுருவத்தை எழிலுறக்காட்டித் திகழ்கின்ற தல்லவா! அன்றியும், இதன்கண் விரவியுள்ள உடையாள், எம்மையாளுடையாள், நந்தம்மையாளுடையாள், எம்பிராட்டி, எங்கோமான் என்னும் பொருள் பொதிந்த பொன்மொழிகள் அம்மையப்பரின் தலைமையினையும் அடிகள் அவர்மாட்டுக் கொண்டுள்ள உரிமையினையும் விளக்கா நின்றன.

3. மற்றும், பொருளதிகாரத்திற் கூறப்பட்ட தலைமகனும் தலைமகளும் களவொழுக்க முடையராய் உடன்போக்கு நிகழ்த்திய காலத்துச் செவிலி தலைவியை நாடிச் செல்லும் நெறியிடை எதிர்வருவாரை மான்போலு நோக்கினையும் மயில்போலுஞ் சாயலினையு முடையாள் ஒரேந்தலோடு நுங்கள் எதிரேவரக் கண்டீரோவென வினவ, அவர் நீ கூறுநின்றவரைக் கண்டோம். அவ்விருவரும் தம்முளியைந்து செல்லாநின்றன ரெனக்கூறும், 'இயைபெடுத் துரைத்தல்' என்னும் அகப் பொருள் துறைக்கு அடிகள் அருளிய செய்யுள்:-

மின்றெருத் திடுகழ னூபுரம் வெள்ளைசெம் பட்டுமின்ன
வொன்றெருத் திடவுடை யாளொடொன் றும்புலி யூரனென்றே

நன்றுத் தெழிலைத் தொழவுற் றன மென்னதோர் நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனமன்னை நீசொன்ன கொள்கையரே.
என்பதாகும். (திருக்கோவையார்-246.செ.)

இதன்கண், "அன்னாய்! நீ கூறிய கோட்பாட்டை யுடையாரைக் குன்றத்திடைக் கண்டேம். அவ்விருவருமியைந்து சேறலின், மின்றாளுண்டாகாநின்ற அவனது கழலும், அவளது சிலம்பும், அவனது வெண்பட்டும், அவளது செம்பட்டும் விளங்க ஒரு வடிவை யொத்தலான் எல்லாவற்றையு முடையளாகிய தன் காதலியோ டொருவடிவாய் விளையாடும் புலியூரனென்றே கருதி யாங்களெல்லாமொத்துப் பெரிது மவ்வழகைத் தொழ நினைந் தோம். அந்நன்மை யெத்தன்மையதோர் நன்மைதான்! அது சொல்ல லாவதன்று." என்று தலைமகனுக்குச் சிவபெருமானை யும் தலைவிக்கு உமையம்மையாரையு மொப்பிட்டுரைத்தலோடு அவர்களியைந் திருத்தற்குப் பெண்ணொரு பாகமுற்ற பெருமானை யுவமைப்படுத்திப் பிறர் கூற்றாகக் கூறுமிடத்தும் தம் மன நிலையை வெளிப்படுத்திக் காட்டல் வியக்கத்தக்கதாம். நெஞ்சின் மிக்க பொருளை வாய்சோர்ந்து முரைத்தல் இயல்பாகு மல்லவா? மேலும், இச்செய்யுள்,

"சிலம்புஞ் சிறுநுதலுஞ் சில்குழலும் பல்வளையு மொருபாற் [றோன்ற
அலங்கலந் திண்டோளு மாடெருத்து மொண்குழையு மொரு [பாற்றோன்ற
விலங்க லருஞ்சுரத்து வேறுருவி னொருடம்பாய் வருவார்க் [கண்டே
யலங்க லவிர்சடையெம் மண்ணல் விளையாட்டென் றகன்றேம் [பாவம்"

என்னும் ஆன்றோர் செய்யுளை ஞாபகப் படுத்துகின்றது.

4. பின்னர்,

தோழியால் சேட்படுத்தப்பட்ட தலைமகன் தனக்கு அன்று
தோழியைக் காட்டினமை நினைந்து கண்ணினைப் புனைந்துரைப் [பன்.

அதனைக் 'கண்ணயந்துரைத்தல்.' என்பர். அதற்குக் கூறியுள்ள செய்யுள்:-

ஈசற்கி யான்வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்றில்லை யின்னொளிபோன் றவன்றோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன்பூங்கழல் யாம்
பேசத் திருவார்த் தையிற்பெரு நீளம் பெருங்கண்களே.

(திருக்கோவையார்-109.செ.)

என்பதாகும். இதன்கண் என்னாற் காணப் பட்டவளுடைய பெரிய கண்கள் ஈசனிடத்து யான் வைக்கப்பட்ட அன்புபோல அகன்றும் அவனால் வாங்கப்பட்ட எனது பாசம் போலக் கறுத்தும், அவனது தில்லையி னொளியை யொத்தும், அவன் றோள்களிற் சாத்தும் அத்திருநீறுபோல வெளுத்தும், அவனது பூப் போலிருக்குந் திருவடிகளை யாம் பேசும் அத் திருவார்த்தை போல மிகவும் நெடியன வாயிருந்தனவென்று கண்ணினது அகலம், கருமை, ஒளி, வெண்மை, நீள முதலியவற்றை இத் தகைய உவமைவாயிலாக விளக்குந்திறன் எவர்மாட்டுங் காணப் படாத தொன்றல்லவா? "கண்ணிற் கியல்பு கசடறக் கிளப்பின் வெண்மை கருமை செம்மை யகலம், நீள மொளியென நிகழ்த் துவர் புலவர்." என்னுமிலக்கணத்தில் 'செம்மை' இச்செய்யுளிற் கூறப்படாததை "அவன்றோளிற்பூசத் திருநீறென்றதனாற் சிவப் புஞ் சொல்லியதாயிற்று. அது செம்மையாற் றோன்றும் வரி யென வறிக." என்று கூட்டியுரைக்கும் உரையாசிரியர் மதிநுட் பமும் ஈண்டு நோக்கத் தக்கதாகும்.

மேலும், இச்செய்யுள் அடிகள் இறைவனிடத்து வைத் துள்ள பேரன்பினையும், அவன் புரிந்த பேரருளினையும் காட்ட லோடு நீறணிந்த கோலம் அன்பர் நெஞ்சகத்து நீங்கா துறை தலையும் விளக்காநிற்கும். இத்தகைய உவமைகள்பல ஆங்காங்கே இன்பம் பயப்பன காண்க.

பெருமான் அருளிய திருவாசகம், திருக்கோவை யாரென் னும் முழுமுதற் றமிழ்ப்பனுவல்கள் இத்தகைய உவமை வாயி லாகவும் பிறவாற்றானும் அடிகள்தம் உளப்பான்மையை விளக் கிக்காட்டலோடு அவர்தம் வரலாற்றினை விரித்துரைப்பனவாயும்

அறிவ னூல்களியற்றுவார்க்கோர் வரிச் சட்டமாயும், எழுத்துச் சொல்லி லக்கணங்கட்கோ ருறைவிடமாயும், அகம் புறமாகிய பொருளிலக்கணத் துறைகளை விரித்துத் தமிழிலக்கியங்களைப் பெருக்க வழி காட்டுவனவாயும், கூறும் பொருளுக் கேற்ற மெய்ப்பாடு பயக்குஞ் சொல்லோசை யுடையனவாயும், அறிவுக் கண்ணுலோர் வார் தம் மனத்தைக்கவரும் திருவுடையனவாயும் இலங்குகின்றன. வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட முதனூற் பொருளை முடிவுறக் கூறல் எம்மனோர்க் கெளிதாமோ!

இக்கட்டுரையாற் போந்த பொருளாவன:- தமிழ்மொழியில் வீட்டுநூல்கள் உளவென்பதூஉம், திருவாசகம் திருக்கோவை யாரென்னும் அரிய நூல்கள் அவற்றின்பாற்படுவன வென்ப தூஉம், இந்நூல்கள் ஆசிரியருள்ளத்தைத் தெளிவுறக் காட்டித் திகழ்கின்றன வென்பதூஉம் பிறவுமாம்.

பெருங்காற்றும், மின்னலும், இடியும்

திரு. K. கோவிந்தன், மாணவன், ஔவைத்தமிழகம், திருவத்திபுரம்.

பெருங்காற்றும், மின்னலும், இடியும் வெயிற்காலத்து யாவரும் கண்ட திசயிக்கும், கானல், பூகம்பம், சூறுவளிபோன்ற இயற்கைத் தோற்றங்களின்பாற்படும். பெருவலியும், பெருஞ் செயலு முடையவாய் உலகிடைத் தோன்றும் இவற்றிற்குத் தோற்றக் காரணமும், தோற்றத்திற்குரிய முறைமையும் உண் டென்பதை, உலகிடையுலவும் ஒவ்வொருபொருட்கும் தோற்றக் காரணம் உண்டு என்பதைத் துணிந்த யாவரும் உணர்வர்.

சூடுமிகுந்த நாடுகளில், மழைதோன்றும் பொழுதெல்லாம், மின்னலும், இடியும் உடன் தோன்றுதல் இயற்கை. 'தென் னமரிக்காவில், பூ நடுவரையின் (Equator) அருகிலுள்ள

ஊர்களில், நுண்ணிய ஒலி (Sound) யினையும் விரைவில் உணரும் பொறி (Machine or tool) யுடையார் யாவரும், தம்மைச்சூழ்ந்து நிற்கும் காற்றிடையே, எஞ்ஞான்றும் இடியோசை யுண்மையை யுணர்வர்' எனப் பாசிங்கால்ட் (Boussingault) என்பார் கூறு கின்றனர்.

ஆப்பிரிக்காவில் உள்ள அபிஸீனியா நாட்டில் தாம் வதிந்த நான்கு ஆண்டைய எல்லைக்குள், ஏறக்குறைய 1900 இடியோடு கூடிய புயல் நிகழக் கண்டதாகவும், அவைதாமும், கோடை காலத்தே, நாட்காலத்து நண்பகல் கழிந்த பின்றையே நிகழ்ந்த தென்றும், அவைகளில், நள்ளிரவு முற்பகலாகிய இருபோதி னும் கண்டன இருபத்திரண்டே என்றும், டி. அப்பாடி (D. Appadie) என்பவர் கூறுகின்றனர்.

குளிர்ந்த நாடுகளில், இவற்றின் நிகழ்ச்சி மிக அரிது. ஸ்பிட்ஸ்பர்க்கன் (Spitsbergen 78. O. N. 15. OE.) என்னும் தீவின்கண் வதிந்த நால்வர், தாம் வாழ்ந்த ஆறுண்டைய எல்லை யில் ஒரு முறையே இடியோசை கேட்டனராம். ஆப்பிரிக் காவில் உள்ள கேப்காலனி, நேட்டால் என்ற இருநாட்டினும், நேட்டால் நீர் வளமிக்கதாகலின், கேப்காலனியில் நிகழும் இடி யினும், அதன்கண் நிகழ்தல் மிகக்குறைவு என்று சர்ஜான் ஹர்ஷல் (Sir John Hershel) கூறுகின்றனர்.

இதுகாறும் கூறியவாற்றால், பெருங்காற்றும் மின்னலும் இடியும், சூடுமிகுந்தநாடுகளில், கோடைகாலத்தே, நாட்காலத்து நண்பகல் கழிந்த பின்றையே நிகழும் என்பதும், குளிர் நாடு களில், அவற்றின் நிகழ்ச்சி மிக அரிது என்பதும் கூறப்பட்டன.

1752-ஆம் ஆண்டில்(Franklin) பிராங்க்லின் என்பவர் புயல் வீசும் காலத்தில் ஒரு காற்றாடியில் இருப்பாணி ஒன்றைக் கட்டி, வானத்தே பறக்கவிட, அதன்கண் ஒளியுடைப் பொறிகள் பல இருக்கக் கண்டு அவற்றை யாராய்ந்து அவை மின்சாரப் பொறிகள் எனத்துணிந்தனர். மின்னலுக்குரிய ஒளியும் வலியும், மின்சார காரியமென்ற உண்மையைப் பிராங்க்லின் துணிந்த

ஓராண்டிற்குப் பின்னர் இதனைப் பல புலவர் பெருமக்கள் ஆராயத் தொடங்கினர். அட்ரியாடிக் கடற்கரைக்கண் நிற்கும் டுயினோ என்னும் பேரகத்திருந்து (Duino castle) பலர் இவ்வுண்மையை ஆராய்ந்து வந்தனர். ஆங்கே, நெடிய இருப்புப் பாரை ஒன்றை நிறுத்தி கூரிய மழுவேந்திய ஒருவனை அவண் நியமித்து மின்னெழும் பொழுது அம்மழு நுனியைப் பாரையின் முடியிற்பட நிறுத்துமாறு பணித்தனர். அவன், இடிமின்னுக்களின் பயனாக, அவற்றின்கண் தீப்பொறி பறக்கக் கண்டு காணுந்தோறும் தன் கைம் மணியை இயக்குவன். இங்ஙன் புயலிடைப் பெறப்படும் வளி மின்சாரத்தைப் (Atmospherical-electricity) பெரிதும், ஆராய்ந்துகண்ட பேராசிரியர் கிராஸ்(Prof. Crosse) என்பவராவர்.

கட்புலன் செறியத் தோன்றுங்கால், பற்பல கதிர்களாகப் பிரிந்து பாய்ந்து எழும் மின்னுக்கள், வளியிற் செறிந்துள்ள அணுக்களின்வழியே வெளிப்போதருவனவாம். அவ்வளியணுக்கள் ஒரு நெறியினவன்றிக் கோணி வளைந்துகிடத்தலின், மின்னலும், முறுக்குண்டு மிளிரும் பூங்கொடி போலத் தோன்றுவதாயிற்று. மழையினம், இமைப்பது போலவும், அங்காப்பது போலவும் தோன்றும் அகனிலை மின்னல்கள், மிக்க சேய்மைக்கண் உடலும் புயன் மின்னலின் நிழலெனை அறிக.

முழவொலிபோல உருண்டோடும் முழக்கினையுடைய இடியேற்றொலி, முகிலனஞ் செய்யும் எதிரொலி (Echo) யாகும். இதன் வன்மை மென்மைகள், எதிரொலி செய்யும் எழிலித்திரளின் இயல்பின் அமைந்தன. சுவிட்சர்லந்திலுள்ள ஒரு மலைக்குவட்டுமிசை சென்ற இருவர், தாம் நின்றவிடத்தே வலிய முகிலினம் தழுவி மறைத்துக் கோடல்கண்டு தம் கையகத்திருந்த துப்பாக்கியை வெடித்தனர். வெடித்தார்க்கு, அவ்வெடியொலி, முகிற்குழாங்களால் எதிரொலிக்கப்பட, பேரிடியேற்றின் பெருமுழக்கெனை முழங்கி அம்மலையகமெங்கும் விதிர்ப்புறச் செய்ததாம். பின்னர், அவர், துப்பாக்கி வெடிகளைக் கிளப்பிய வண்ணமே இறங்கி வந்தனர்; வரவர, வெடியோசையின் எதிரொலியும் குறைந்து வரலாயிற்று.

பதினாறுவது இராச்சிய ஆண்டில் தீட்டப்பட்டதே பழமையானதாகும். அதில் இவ்வூர் "ராஜேந்திர சிம்ஹ வளநாட்டு மண்ணி நாட்டு, திரைலோக்கி மகாதேவி சதுர்வேதி மங்கலம்" என்று குறிக்கப்பெற்றுள்ளது.

இவ்வூரைக் குறிப்பிடும் தஞ்சை இராசராசேச்சுரத்தில் பொறிக்கப் பட்டுள்ள முதலாம் இராசராசன் கல்வெட்டொன்றில் * "ராஜேந்திர சிம்ஹ வளநாட்டு மண்ணிநாட்டு

---

* S. I. I. Vol. II part III page 317. line 7.

"ராஜேந்திர சிம்ஹ வளநாட்டு மண்ணிநாட்டு ஏம நல்லூராகிய திரைலோக்கி மகாதேவி சதுர்வேதி மங்கலத்து சபையார் இடக் கடவ திருப்பரி சாரகஞ் செய்யும் மாண் இரண்டு."

இராசேந்திர சிங்க வளநாடு:— முதலாம் இராச ராச மன்னன் காலத்தில் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவற்றுள் இராசேந்திர சிங்க வளநாடு என்பது ஒன்றாகும். இது காவிரிக்கும் வெள்ளாற்றிற்கும் (வடவா) இடையிலுள்ள பெருநிலப் பரப்பாகும். இம்மன்னன் காலம் முதல் அதிராச ராசன் காலம் முடிய இதற்கு இப்பெயர் வழங்கி வந்தது. இவ் அதிராச ராச மன்னனுக்குப் பின்னர் பட்டமெய்திய முதற் குலோத்துங்கன் இவ்வள நாட்டை இரண்டாகப் பிரித்து, கீழ்ப் பகுதிக்கு விருதராச பயங்கர வளநாடு என்றும், மேற்குப் பகுதிக்கு உலகுய்ய வந்த வளநாடு என்றும் பெயரிட்டனன். இம்மேற்குப் பகுதியோ விக்கிரம சோழன் காலத்தில் விக்கிரம சோழவளநாடு என்று பெயர் எய்திற்று.

மண்ணிநாடு:—மேற்கூறிய இராசேந்திர சிங்க வளநாடு, மண்ணிநாடு, இன்னம்பர்நாடு, பொய்கைநாடு என்பனவாகப் பலநாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவற்றுள் மண்ணிநாடு என்பது ஒன்றாகும்.

ஏமநல்லூராகிய திரைலோக்கி மகாதேவி சதுர்வேதி மங்கலம், இடைவை, நாட்டார்மங்கலம், பனந்தை (பனந்தாள்) வேம்பற்றூராகிய ஆவணி நாராயண சதுர்வேதிமங்கலம், திருக்குடித்திட்டை (திருக்களத்திட்டை) திருவிசலூர் ஆகிய இவ்வூர்கள் இம்மண்ணி நாட்டைச் சார்ந்தனவென்று தஞ்சை இராச ராசேச்சுரத்துக் கல்வெட்டுக்களால் புலப்படுகின்றன.

ஏமநல்லூராகிய திரைலோக்கி மகாதேவி சதுர்வேதிமங்கலம் என்ற தொடர் காணப்படுவதால் இக்காலத்துத் திரைலோக்கி * என வழங்கப்படும் ஊரே ஏமநல்லூர் என்னும் தலமென்பது வெளிப்படுகிறது."

முதலாம் இராச ராச மன்னன் தன்மனைவியின் பெயரை அவ்வூருக் கிட்டுத் திரைலோக்கி என மாற்றினன் போலும்.

பெண்ணின் பெருமை

திருவளர் செல்வி R. மங்கையர்க்கரசி
ஒன்பதாவது வகுப்பு

தஞ்சை விநாயகர் தமிழ்க் கழத்தின் ஆண்டுவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவு

தலைவர் அவர்களே! பெரியோர்களே! என் உடன் பிறந்தோர்களே! உங்கள் அனைவர்க்கும் என் பணிவான வணக்கம்.

பெண்மை எனப்படுவது யாது? இன்பநிலை என்று சொல்லலாமன்றோ? அடக்கம், பொறுமை, தியாகம் முதலியன பெண்மையின் உறுப்புக்கள். அவ்வுறுப்புக்கள் சேர்ந்த இன்பம் பெண்மையின் உடல்; அவ்வின்ப உடல் நுண்ணியதாகலின், [Abstract] அதற்கு என்புதோல் போர்த்த ஒரு பரு உடல் இறைவனால் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வடிவம், 'பெண்', 'பெண்' என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. பெண்மையே இன்பமாயின், பெண்மையே அழகுமாகும். பண்டைத் தமிழ்மக்கள் பெண்ணை அழகென்றே கொண்டார்கள்.

* குறிப்பு:—'கோடைத் திரைலோக்கிய சுந்தரனே' என்று திருவிசைப்பாவில் இருப்பதால் சோடை என்ற ஊரே, திருவிசைப் பாக் கொண்ட தலமாகும். இத்திரைலோக்கி, திருவிசைப்பாப் பெற்றதன்று.

நீலவானத்தில் திங்கள்போலவும், பசுங்கொடியில் மலர்போலவும், மலரில் நிறம்போலவும், பறவைகளில் மயில் போலவும், விலங்குகளில் மான்போலவும், பெண்ணென்னும் அழகு இவ்வழகிய உலகை அழகு செய்கிறது. பெண்ணில்லையேல் உலகில் அழகேது? பெண்ணழகிலுள்ள தெய்வத்தன்மையை உணர்ந்து, அவ்வழகை எத்துணைக் கவிவாணர் எழுத்தால், எழுதி, எழுதி, இன்பம் நுகர்ந்தார்! எழுதி எழுதி எழுத்துக்கு முடிவு கண்டாரேயன்றி அழகுக்கு முடிவு கண்டாரில்லை. அழகுக் கடவுளுக்கு முடிவேது? அழகாகிய பெண்ணிற்கு முதன்மை கொடுத்துப் பெருமை பேசுதல் தவறாகுமா?

அன்பர்களே! பெண்ணின் வாழ்க்கையை ஊன்றி நோக்குவோமாயின், பெண் பிறவியின் உன்னதநோக்கம் நன்கு புலனாகும். இவ்வுலகஆக்கமும், அழிவும் பெண்ணிடத்திலிருக்கின்றன. தன்வயிற்றிற் பிறக்கும் பிள்ளை, பெருங்கல்விபாளனாய், வீரனாய், அன்பனாய், நல்லவனாய், உலகில் வாழவேண்டும் என்னும் எண்ணத்தையே தாய்கொள்வது வழக்கம். பிள்ளை கெட்டொழிய வேண்டுமென்று தாய் ஒருபோதும் நினையாள். அவள் வயிற்றிற் பிறந்து, அவளால் வளர்க்கப்பெறும், பிள்ளைகளாலல்லவோ பின்னைய உலகம்? எனவே உலகம் தாயிடத்தன்றோ இருக்கின்றது? அவ்வுலகம் காக்கும் தாய்மையுடைய பெண்ணின் பெருமையை என்னென்று கூறுவது? பெண்ணின் பெருமை உணர்ந்தன்றோ திருவள்ளுவனார் "பெண்ணிற் பெருந்தக்கயாவுள" என்று உலகிற்கு அறிவுறுத்தினார்.

அழகு, அடக்கம், பொறுமை, தியாகம், பொதுநலம், இரக்கம், வீரம் முதலிய குணங்கள் பெண்மைக்குணங்கள். கரடு, முரடு, அவா, பொறாமை, தன்னலம், சீற்றம் முதலியன ஆண்மைக்குணங்கள். ஆண்மகன், கரடும், முரடும், சுருளும், பிளவும், நிரம்பிய பட்டைகள் போர்த்த வலிய மரம் போன்றவன். பெண்மகள், கரடு, முரடு, முதலிய கொடுமைகளை ஒடுக்க, மரத்தைச்சுற்றி, மனதுக்கினிய பசுமை வழங்கும் மெல்லிய பூங்கொடி போன்றவள். ஆண்வடிவில், பெண்மைக் குணம் பெற்றமக்களே, உலகில் அடியார்களென்றும், அறிஞர்

களென்றும், வீரர்களென்றும் பாவலர்களென்றும் சொல்லப் பட்டுவருகிறார்கள். பாட்டிற்சிறந்த "ஷெல்லி" வீரஞ்செறிந்த "நெப்போலியன்", பொறுமையிற் சிறந்த காந்தி அடிகள், இவர்களது திரு வுருவப்படங்களை உற்று நோக்குவோம். அவர்கள்முகத்தில் மனதைக்கவரும் பெண்மைஎன்ன அழகாகப் பொலிகிறது? புத்தர், கிறிஸ்து, அப்பர் முதலியோர் படங்கள் நமக்குக் கிடைக்குமானால் அவர்கள் முகத்திலும் பெண்மை பார்க்கலாம். நாடே, நீ ஒரு அன்னை! மொழியே, நீ ஒருபெண்! மலையே, நீ ஒரு நங்கை! ஆறே, நீ ஒருசெல்வி! கலையே, நீ ஒரு மகள்! எனஉலகிலுள்ள, காணும், அறியும், உயிர்க்கும், பொருள் கட்கெல்லாம் பெண்மைத்தன்மை வழங்கி பெருந்தெய்வங்களாக நம் நாட்டினர் போற்றி வந்துள்ளார்கள் எனின் பெண்ணின் பெருமையைப் பேசவும் வேண்டுமோ? அம்மட்டுமா? பார்வதி பாகன், லட்சுமி நாராயணன், வள்ளி மணாளன், முதலிய வழக்குகளை நோக்குக. பெண்ணையே தேவியென்று அழைக் கின்றார்களேயன்றி, ஆணைத் தேவன் என்று சொல்லும் வழக்கம் நம்நாட்டில் இல்லை. இவ்வாறு பெண்ணிற்கு முதன்மைவழங்கிய நாடு, இதுபோழ்து அம்முதன்மை மறுக்கும் நிலை எய்தியிருக் கிறது. தாய்மையுடைய பெண்ணிற்கு முதன்மை வழங்க மறுப்பது அநாகரீகம். "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய்" என்றும், "சத்தியாய்ச் சிவமாகி" என்றும், பெரியோர்கள் பெண்ணிற்கு முதன்மை வழங்கியிருக்கிறார்கள். பெண்வயிற் றிற்பிறந்த நாம் பெண்ணை முதலாகக் கொள்வோமாக.

யான் பெண்ணின் வயிற்றில் தோன்றினேன். பெண்ணு டன் பிறந்தேன். பெண்ணுடன் வாழ்கின்றேன். யான்தொழும் அன்புத்தெய்வம் பெண். யான் பேசும்மொழி எனக்குப் பெண் இன்பம் நல்குகிறது. எல்லாம் பெண்மயமாக என்னைச்சூழ்ந்து, என் உயிருக்கும் உடலுக்கும் நலஞ்செய்கின்றன, இத்தகைய பெண்தெய்வத்தை முதன்மையாகப் போற்றுகிறேன். வணங்கு கிறேன், வாழ்த்துகிறேன், பெண்ணே முதன்மையுடையவள்.

அன்பர்களே! எல்லாவற்றிலும் முதன்மைபெற்று விளங் கும் பெண்ணிற்கு உரிமை வழங்கவேண்டுமா வேண்டாமா

என்ற ஆராய்ச்சியும் உலகில் சில இடங்களில் நடைபெற்று வருகிறது. உரிமை என்பது ஒருவர் கொடுப்பதன்று மற்றொருவர் வாங்குவதுமன்று. அஃது எவரிடத்தும், எல்லாவிடத்தும் இயல்பாய் அமைந்து கிடப்பது. சிலர் தமக்குள்ள வன்மையால் பிறர் உரிமையை மறித்தும், பறித்தும் வருகிறார். பெண்ணுரிமைக்குக்கேடு எவ்வுலகில் விளைந்திருக்கிறது? அஃறிணை உலகிலா? ஆறறிவுடைய மக்கள் உலகிலா? வெட்கம்! வெட்கம்!! புல், செடி, கொடிகளில் ஆணினம், தன் பெண்ணினத்தின் உரிமையைத் தடுத்திருக்கிறதா? பறவையோ அன்றி விலங்கோ தன் இனத்தின் பெண் உரிமையைக் கெடுத்திருக்கிறதா? அஃறிணை உலகில் பெண் உரிமைக்குப் பழுது நிகழ்ந்ததில்லை. பாழான ஆறறிவுடைய உயர்திணை உலகிலேயே அவ்வுரிமைக்குப் பழுது நேர்ந்திருக்கிறது. இவற்றிற்கெல்லாம் காரணம் ஆணுலகின் தன்னலமேயாகும். ஆண்மகன், பெண்மகளை தனக்குரிய சாமப் பொருளாகவும், பணியாளாகவுங்கொண்ட நாள்தொட்டு, பெண்மகள் உரிமை இழக்கலானாள். வலிய ஆண்முன், மெலிய பெண் என் செய்வாள்? பண்டைக் காலத்திலே நமது நாட்டுப் பெண்மணிகள் எல்லாத்துறைகளிலும் உரிமை பெற்றிருந்தார்கள். கல்வியாளர்களாய், வீரத்தாய் மார்களாய் அரசிகளாய் எவ்வினையும் ஆற்றவல்லவர்களாயிருந்தார்கள். அந்நாளில் நம்நாடு உற்றிருந்த செழுமைக்கு ஓர் அளவில்லை. வேதகாலத்திலே, தலைவன் வேள்வி செய்யும்போது தலைவியும் உடனிருப்பாள். மந்திரத்திலாதல், சுரத்திலாதல் தலைவன் பிழை நிகழ்த்துவனேல், உடனே திருத்தமாகத் தலைவி அதைச்சொல்லி ஒழுங்குசெய்வது வழக்கம். வேதகாலங் கடந்த பன்னூறு ஆண்டுகட்குப் பின்னரும், கணிதத்திற் சிறந்த லீலாவதியும், வான சாஸ்திரத்தில் பேர்பெற்ற கானையும், புலமைமிக்க இரோஜேஸ்வரியும், நம் நாடு குறிக்கத் தக்க பண்டிதைகளாவர். இதிகாச காலத்தில், சீதை நிறையும், சபரி தவமும், குந்தி வீரமும், காந்தாரி அரசும், திரௌபதியின் அருஞ்செயலும், அக்காலத்திய பெண்மணிகளின் உரிமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. பழந்தமிழ் நாட்டிலே, பெண்மகள் தனக்கினிய

கணவனைத் தானே தெரிந்தெடுத்து வந்த வழக்கம் ஒன்றே, அந்நாளைய பெண்ணுரிமைக்குப் போதிய சான்றாக நிற்கிறது.

அன்பர்களே! பழந் தமிழ்நாடு ஆண்புலவர்களோடு பெண் புலவர்களையும் அணிந்திருந்தது. வெள்ளிவீதியார், ஔவையார் பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர் முதலியோர் அந்நாளில் தமிழ் வளர்த்தபெண்மணிகள். கல்வியிற்பெரிய கம்பன் காலத்திலும், நம் தமிழ் நாட்டுப் பெண்மக்கள் கல்வியில் தேர்ச்சியுற்றிருந்த காட்சியை கண்ட புலவர், அதை கோசலத்தில் அமைத்துப் பாடியுள்ளார்.

நாயன்மார், ஆழ்வார் காலத்திலும் பெண் கல்வி தமிழ் நாட்டில் நிலவியிருந்தது. காரைக்கால் அம்மையாரும், ஆண்டாள் அம்மையாரும் பாடியஅருட்பாடல்கள் நம்மெதிரில் நிற்கின்றன. பெண்மக்கள் பாட்டிற்கிரங்கி ஆண்டவன் அருள் செய்யா தொழிந்தனனோ? ஆண்டவனுக்கு ஆண் பாட்டாயிருந்தா லென்ன? அவனுக்கு வேண்டற்பாலது கல்வியின் பயனாகிய அன்பு. அவர்களது அன்பு நிலையை அளந்துகூறுதல் முடியுமா? அத்தகைய அன்புக் கவிமணிகளைப்பெற்றது நம் தமிழ்நாடு.

பண்டைத் தமிழ்நாட்டில், பெண்ணுரிமையும், உரிமைக்கு உயிரனைய கல்வியும் இருந்தமையால், அந்நாளையப் பெண்மக்கள் வீரத்தாய்மார்களாகவும், வீரப்பெண்மணிகளாகவும் விளங்கி நின்றனர். அவர் தம் வீரச்செயல்கள் பலவுள, ஒன்று கூறுகிறேன். ஒரு பெண்மணியின் கணவன் போர்க் களத்தில் மறப்போர் புரிந்து, இன்னுயிர் துறந்தான். அவன் உயிர்துறந்த மறுநாள், மாற்றார் செருப்பறைகேட் டாள். கேட்டதும், தன் ஒரே மகனை அழைத்துத் தலைமயிர் நீவி னாள். போருடை புனைந்தாள். வேல்கைத்தந்து, “போர்க்களம் போய்வருக.” என்று மகிழ்ச்சியோடு வழிகூட்டி அனுப்பினாள். அம்மம்மா! இதுவன்றோ தமிழர்வீரம். இவளது வீரம் கணவன் பிரிவையும் மறக்கச்செய்தது. கண்ணகி என்னும் கற்புக் கடவு ளின் வீரத்தை அறியாத தமிழர்எவர்? இத்தகைய வீரத் தாய் மார்கள் பலர் வாழ்ந்தநாடு இத்தமிழ்நாடு. இவ்வீரத்திற்கு

அடிப்படை—அந்நாளில் பெண்மக்களுக்கிருந்த உரிமையேயாகும். உரிமை இல்லாவிடத்தில் வீர எழுச்சி ஏது?

பின்னர், இடைக் காலத்திலே பெண்மக்கள் உரிமை நம் நாட்டில் கடியப்பட்டது. பெண் கல்வி வாயில் மண் அள்ளி இட்டனர்; எல்லாமுறையிலும் ஆண்மகனை ஒத்தும், சிலவற்றில் மேம்பட்டும்நிற்கும் பெண்மகள், கல்விபெறலாகாதெனக் கட்டுப் பாடிட்டனர்; பெண் மக்களை விலங்காக்கித் தங்கள் வழியில் ஆட்டவேண்டுமென எண்ணங்கொண்டனர். இவை ஆணுலகங் கொண்ட தீய எண்ணமேயன்றி வேறென்ன? "விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோடேனையவர்" இந்நாளில் நமதுநாட்டில், வான்மீகிகள், நக்கீரர்கள், திருவள்ளுவர்கள் தோன்றாமைக்குக் காரணமென்னை? தாயைக் கல்வி இழக்கச் செய்து அவள் உரிமை கடிந்ததன்றி வேறென்னை?

ஆண் மக்களைப்போல், பெண்மக்கள் படிக்கலாகாது என்னுங்கட்டுப்பாடு எற்றுக்கு? கல்விப் பயிற்சிக்குரிய மூளை பெண் மக்கட்கில்லையோ? "நுண்ணிய பொருளை, மிகவிரைவில், உணரும் ஆற்றல் பெண்மக்கட்கே அதிகம்" என்பதைத் தற்புகழ்ச்சியாகக் கருதாது, அறிஞரால் ஒப்பப்பட்ட உண்மையென உணரும்படி வேண்டுகின்றேன். கல்விக் கடவுளைப் பெண்ணெனக்கொண்ட நமது நாடு, பெண் கல்வியை மறுப்பது பொருளற்ற தொன்றாகும். கல்வித்துறை, பெண்மக்கட்கு இயற்கையில், அரண் செய்வதன்றி, முரண்செய்வதில்லை; பெண் கல்வியை மறுப்பது, இறைவன் படைப்பு நோக்கை இடர்ப்படுத்துவதாகும்.

பின்னைநாளில், ஆண் மக்கள் பெண் மக்களின் கல்வியுரிமையைமட்டுமா கெடுத்தார்கள்? பிறப்புரிமைகளையும் பறித்தார்கள். எத்தனை கட்டுப்பாடுகள்? எத்தனை விதிகள்? எத்தனை தண்டனைகள்? எண்ண,எண்ண,உள்ளம் உருகுகிறது. அக்கால அறிஞர்களின் வன்கண் இருந்தவாறென்னே! பிறப்பில்ஆணாகப் பிறந்தால் எல்லாம் செய்யலாம்—பெண்ணாகப் பிறந்தவர்கட்கு மட்டும் விதிகள்! கட்டுப்பாடுகள்! தண்டனைகள்! ஆண்டவனே! கொடுமை பொறுக்க முடியவில்லை. உன்னைநோக்கி முறையிடு

கின்றேன். ஒரு பாதியாயுள்ள பெண்ணின் சிறுமை, மற்றொரு பாதியாயுள்ள ஆணையுந்தாக்கி, முடிவில், வாழ்வையும், நாட்டையும் குலைக்கும் என்பதை ஆணுலகம் இனியாதல் உணர்ந்து நடக்கட்டும். பெண் ஒழுக்கங் காக்கவேண்டுமென்பதை ஒரு முறைக்குப் பன்முறை யான் வலியுறுத்துகிறேன். அவ்வொழுக்கம் ஆணுலகிற்கும் வேண்டற்பாலதென்று அவ்வளவில் வலியுறுத்துகிறேன்.

இம்மட்டுமோ பெண் மாயையாம்—அவளுடன் வாழ்தல் அஞ்ஞானமாம்—அவ்வாழ்வு துறத்தலே மெய்ஞ்ஞானமாம். இவ்வாறெல்லாம் ஞானம் பேசுகின்றனர். அறிஞரே! நீவிர் யாண்டிருந்து முளைத்தீர்? நுமது தந்தை ஒருபெண்ணுடன் கூடி வழாதொழிந்திருப்பரேல் நீவிர் இப்போது இந்த ஞானம் பேச முடியுமோ? பெண்ணின் வயிற்றிற் பிறந்து ஞானம் பேசும் ஒருவர், அப்பெண்ணை: மாயை—அஞ்ஞானம்—பிரவர்த்தி—என்று பேசுவது எத்தகைய நன்றி அறிதல்! எத்தகைக் கைம்மாறு! வெட்கம்! வெட்கம்!!

பெரியோர்களே! உரிமை எல்லோருக்கும் பொதுவானது வானத்தில் மேகந் தவழ்வதுபோலவும், கடலில் அலை எழுவது போலவும், பறவை அழகிய சிறகை வீசிப்பறப்பதுபோலவும், பெண் தன் உள்ளத்தெழும் விருப்பவழி நடக்கும் உரிமையுடையளாதல்வேண்டும். பெண் அடிமை வாழ்வு நடத்தினுல், அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளை அடிமை யுணர்வுடன் பிறக்கும். பெண்ணுரிமை பிடுங்கப்பட்ட நாடும் உரிமை இழந்த நாடாகும், இதற்குச் சான்று நமது நாடு.

பெண், ஆணை அடக்கப் புகுவதுந்தவறு. ஆண், பெண்ணை அடக்கியாள்வதுந் தவறு. இருவரும் ஒத்துநடத்தலே இன்பம். உயர்வு, தாழ்வு, போராட்டம் முதலிய எண்ணங்களின்றி, ஒருயிர் ஈருடலென, பெண் ஆணுடன் ஒன்றி வாழ்வு நடாத்தி உலகை வளர்ப்பாளாக. இது பெண்ணின் பெருமை.

பெண்மை என்பது அமைதித் தன்மை. அமைதிநிலை இறைமையென்பது. அவ்விறைமையுடைய தாயை வெறும்பெண்

ணென்று கூறுவது? கூடாது. அவளைப் பெண் தெய்வமென்று போற்றுதல் வேண்டும். பெண்—தெய்வம்! பெண்—தெய்வம்! பெண்—தெய்வம்! முழுமுதற்பொருள், தண்மை வெம்மையெனும் இரண்டு சக்திகளாக உலகை இயற்றுகிறது. அத் தண்மையின் கூறு பெண்ணுலகு. பெண், பிறந்து, உலகவளர்ச் சிக்குத் துணைபுரிந்து மீண்டும் அத்தண்மை தெய்வமாகிருள். பெண் மகளாகத் தோன்றினுள்; மனைவியாக வாழ்ந்தாள்; தாயாகத் தொண்டுசெய்தாள். இப்பொழுது தெய்வமாக காட்சி யளிக்கிருள். உலகீர்! அக்காட்சி காணுங்கள்; தெய்வம் தெய்வமென்று எங்குஓடுகிறீர்? நூற்களை என் ஆராய்கிறீர்? பெண்மை என்பது என்பு தோல்போர்த்த உடலன்று. அவ்வுடலுள்ளே யுள்ள நுண்மை யிறைமை பெண்மை என்க. அத்தகைப் பெண் மைவாழ்க. ஆண்மக்களே! உங்கள் பெருமை பெண்ணுடன் பொருந்தி நிற்பது. உங்களைப் பெற்றவள் பெண்; உங்களை வளர்ப்பவள் பெண்; உங்களோடு வாழ்பவள் பெண்; உங்களைப் பெண்ணுக்குபவள் பெண்; நீங்கள் பெண்ணுகாது, அதாவது பெண்மை நிலைபெருது, அதாவது அமைதி நிலையெய்தாது, விடுதலையடைய இயலாது. பெண்ணுல் நலனடையும் நீங்கள் பெண்ணுலகையா வெறுப்பது? துறப்பது? நன்றிகொல்லாதே யுங்கள்; தாய்நன்றி கொல்லாதேயுங்கள்; "எந்நன்றி கொன்றுர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை—செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்னும் பொய்யாமொழியை நோக்குங்கள். பெண்ணிற்கு மதிப்புக்கொடுங்கள்; உரிமைகொடுங்கள்; வணக்கம் செலுத்துங்கள் பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம். அவளைக்கட்டுப் படுத்தல்—அடிமைப்படுத்தல்—கொடுமையாக நடத்தல்-அநாகரிகம். பெண்ணலன் உங்கள்நலன்! உங்கள் நாட்டுநலன். அப் பெண்மக்கள் கண்ணீர்விடும் நாடு வறுமை நாடாகும்; அடிமை நாடாகும். அஃது எரிந்துபோகும்; கரிந்துபோகும். ஒரு பெண்ணுக்கு ஸ்ரீராமபிரான் எவ்வளவு முயன்றுர்; எத்துணை இடுக்கணுற்றுர்; எத்தனை போர் புரிந்தார். ஒரு பெண்ணின் பொருட்டு பாரதப் பெரும்போர் நடந்தது. பெண்ணின் துயர் தீர்ப்பது ஆண்மகன் கடமை. பெண் துயர்தீர்க்க இயலாதமகன் ஆண் மகனல்லன். பெண்சிறுமை போக்க உயிரையுந்துறத்தல்

வேண்டும். பெண் பெருமை காக்கவே ஆண்மகன் பிறந்திருக்கிறான். பெண்ணில்லையேல் உலகேது? உயிரேது? அன்பேது? கடவுளேது? எல்லாம் பெண்ணால்; எல்லாம் பெண்ணில். அத்தகைப் பெண்ணை—தாயை—தெய்வத்தைப்—போற்றுங்கள்; போற்றுங்கள்: எங்கணும் பெண்மை பெரலிக; எங்கணுந் தாய்மை யோங்க; எங்கணும் இறைமை வாழ்க.

செருத்துணையாரும் புகழ்த்துணையாரும் அவதரித்த திருப்பதிகள்

திரு T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள்
தமிழ்ப்பண்டிதர், வாணுதுறை ஹைஸ்கூல் கும்பகோணம்

I

அறுபான்மும்மை நாயன்மார்களுள் செருத்துணையார் என்பவர் ஒருவர். இப்பெரியார் தஞ்சாவூரில் அவதரித்து, திருவாரூர் என்னும் திருப்பதியை அடைந்து சிவபத்தியும் அடியார் பத்தியும் மிக்குடையவராய்த் திருத்தொண்டு செய்து வந்தனர். அந்நாளில், திருக்கோயில் வழிபாட்டிற்கு அங்கு வந்த பல்லவர் கோனாகிய கழற்சிங்கரது மனைவியார் பூமண்டபத்தின் பக்கத்திற்கிடந்த ஒரு பூவை எடுத்து மோந்துபார்க்க, அச்செயலைப் பொறாத செருத்துணையார் அவ்வம்மையாரின் மூக்கை அறுத்தனர். அஞ்சா நெஞ்சம் படைத்த இவ்வடிகள் ஆரூரிறைவற்கு மலர்மாலை தொடுக்கும் தொண்டினைப் பன்னாள்புரிந்து, இறுதியில் அப்பெருமானது திருவடி நீழலையடைந்தனர். இவ்வடியாரது வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணத்திற் காணலாம்.

இவ்வடிகள் பிறந்த திருப்பதி தஞ்சாவூர் என்பது 'தஞ்சை மன்னவனாஞ் செருத்துணை தன்னடியார்க்கு மடியேன்' என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவாக்கினால் அறியப்படுகின்றது.

தஞ்சாவூர் என்ற பெயருடைய மூன்று ஊர்கள் நம் தமிழகத்தில் உள்ளன. பாண்டி மண்டலத்தில் தென்காசிக்கருகில் ஒரு தஞ்சாவூர் உளது என்பது, தென்காசிக் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது.[1] சோழமண்டலத்தில் அப்பெயர் வாய்ந்த இரண்டு ஊர்கள் இருக்கின்றன. எனவே, இம்மூன்றனுள் செருத்துணையாரது திருப்பதி யாது என்பது ஆராய்தற்குரியதாகும்.

நம்பியாண்டார் நம்பியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில் உள்ள ஒரு பாடலும், சேக்கிழாரடிகளது பெரிய புராணத்தில் செருத்துணை நாயனார் புராணத்தில் உள்ள ஒரு பாடலும், இவ்வடிகள் பிறந்தருளிய திருப்பதி எந்நாட்டில் உள்ளது என்பதை நன்கு விளக்குகின்றன.

அவை,

'கழிநீள் கடல்நஞ் சயின்றார்க் கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்கழற் சிங்கன்றன் றேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தானென் றியம்புவரால்
செழுநீர் மருகனன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே'

திருத்தொண்டர் திருவந்தாதி, பா—66

'உள்ளும் புறம்புங் குலமரபி னொழுக்கம் வழுவா வொருமைநெறி
கொள்ளுமியல்பிற் குடிமுதலோர்மலிந்த செல்வக் குலப்பதியாந்
தெள்ளுந்திரைகண் மதகுதொறுஞ் சேலுங்கயலுஞ் செழுமணியுந்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு மருக னாட்டுத் தஞ்சாவூர்'

பெரிய புராணம்-செருத்துணைநாயனார்புராணம், பா-1.

என்பன. இவற்றால் செருத்துணையாரது திருப்பதி சோழமண்டலத்தில் உள்ள மருகல் நாட்டுத் தஞ்சாவூர் என்பது வெளியாதல் காண்க.

இனி சோழமண்டலத்தில் தஞ்சாவூர் என்று வழங்கப் பெற்றுவரும் இரண்டு ஊர்களுள், ஒன்று விசயாலயன், முதற் பராந்தகன், முதல் இராசராசன் முதலான சோழமன்னர்கள் வீற்றிருந்து செங்கோலோச்சிய திருவுடைமாநகரமாகும்.

1. Travancore Archaeological Series Vol I, Pages 92 & 110.

இம்மாநகர், தஞ்சாவூர்க்கூற்றத்தில் உள்ளது என்பது 'பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ இராஜராஜேசுவரமுடையார்க்கு நாம் கொடுத்தன...........'[1] என்னும் தஞ்சைப் பெரியகோவிற் கல்வெட்டால் புலப்படுகின்றது. ஆகவே, தஞ்சாவூர்க் கூற்றத்திலுள்ள இத்தஞ்சாவூர் செருத்துணைநாயனாரது திருப்பதியன்று என்பது திண்ணம்.

சோழமண்டலத்தில் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டின் உள்நாடுகளுள் ஒன்றாகிய மருகல் நாட்டில் ஒருதஞ்சாவூர் உளது என்பது 'க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுமருகல் நாட்டு மருகல் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்........... இந்நாட்டு வைப்பூர் ஊரால் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் இந்நாட்டு தஞ்சாவூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் என்ற கல்வெட்டினால் தெரிகின்றது. (South Indian Inscriptions Vol II, Ins No 70.)

இச்செய்தி மற்றொரு கல்வெட்டாலும் உறுதியெய்துகின்றது. அது, (1)'திருவாய்க்கேள்வி முன்னாக திருபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 2-ஆவது ஆடிமாசம் செவரன்மேடான அகரநகரீசுவரச் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீ மூலஸ்தான முடையார் கோயிலிற் செம்பாதி காணியுடைய (2) சிவப்பிராமணன் காசிபன் இருஷப தேவ பட்டனேனும் இந்த ஸ்ரீ மூலஸ்தான முடையார் கோயிலில் மற்றைச் செம்பாதி காணியுமுடைய இக்குடி மகா தேவபட்டனுள்ளிட்ட அனைவோமும் சோழமண்டலத்து மருகல் நாட்டுத்தஞ்சாவூர் தஞ்சாவூர் கிழவன் உலகளந்தா (3)ன் அகமுடையாள் உய்யகொண்டாள் பக்கற் காணி ஒகரியிலே நாங்கள் கொண்ட பழங்காசு ௩ இக்காசு மூன்றுக்கும் பலிசை நிசதிச் செலவாக இத்தேவர்க்கு அந்தியம் போது எற்றி இச்சந்தியிற் பேரமுது செய்த இத்தனையுஞ்செல்ல நாங்களும் எங்கள் சந்தானத்தாரும் சந்திராதித்தவரை.......(4)திதல் ஒருசந்திவிளக்கு எரிக்கக் கடவோமாகச் சிலாலேகை பண்ணிக் கொடுத்தோம்.

1. South Indian Inscriptions Vol II, Ins No 1.

இவ்வனைவோம் இவர்கள் பணிக்க எழுதினேன் இவ்வூர்க் காணத்தான் சிவதாசன் ஆட்கொண்டானுன நூற்று நாற்பத்தெண்மனேன் இவை என் எழுத்து இப்படிக்கு இவை இருஷபதேவ பட்டன் எழுத்து இப்படிக்கு இவை மகாதேவபட்டன் எழுத்து' என்பதாம். (S. I. I. Vol. VII Ins No 44.) எனவே, நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரடிகளும் கூறியுள்ள மருகல் நாட்டுத் தஞ்சாவூர், இவ்விரு கல்வெட்டுக்களிலும் குறிக்கப் பெற்றுள்ள தஞ்சாவூரே யாதல்வேண்டும் என்பது ஒருதலை.

இந்நாளில் நம்மாகாணத்திலுள்ள தாலுக்காக்கள்போல, சோழமண்டலத்தில் பல உள்நாடுகள் முற்காலத்தில் இருந்துள்ளன. அவற்றுள் மருகல் நாடு என்பதும் ஒன்ருகும். இது திருமருகலைச் சூழ்ந்துள்ளநாடு என்பது இதன் பெயரால் அறியப்படுகின்றது. இந்நாடு மிகவும் தொன்மை வாய்ந்ததொன்ரும். ஆளுடைய நம்பிகளும் தமது திருநாட்டுத் தொகையில் 'மருகல் நாட்டு மருகலே' என்று இம்மருகல் நாட்டைக் குறித்திருப்பது அறியத்தக்கது. திருமருகல்,[1] வைப்பூர், பூதனூர், இடையாற்றுக்குடி, தஞ்சாவூர் முதலான ஊர்கள் இந்நாட்டில் உள்ளன என்பது சில கல்வெட்டுக்களால் வெளியாகின்றது. ஆகவே, இந்நாடு முற்காலத்தில் தஞ்சைஜில்லா நன்னிலம் தாலுக்காவில் இருந்திருத்தல்வேண்டும். எனவே, இந்நாட்டில் உள்ள தஞ்சாவூரும் நன்னிலம் தாலுக்காவில் இருத்தல்வேண்டும் என்பது திண்ணம். மாயூரத்திலிருந்து திருவாரூர்க்குச் செல்லும் இருப்புப்பாதையில் வெட்டாற்றிற்கு வடகரையில், திருவிற்குடி என்னும் புகைவண்டி நிலையம் ஒன்று உளது. இதற்குக் கிழக்கே சுமார் ஐந்துமைல் தூரத்தில், தஞ்சாவூர் என்ற ஊர் ஒன்று இருக்கின்றது. நன்னிலம் தாலுக்காவில் உள்ள இத் தஞ்சாவூரே, நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரடிகளும் கூறியுள்ள மருகல் நாட்டுத் தஞ்சாவூராகும். இதுவே, செருத்துணை நாயனார் அவதரித்த திருப்பதி என்பது நன்கு துணியப்படும்.

(தொடரும்)

1. ஒருவணிகனுக்குத் திருஞானசம்பந்த சுவாமிகளால் திருமருகலில் விடந்தீர்க்கப் பெற்று மணஞ் செய்விக்கப்பெற்ற வரலாற்றில் வரும் வைப்பூர் இதுவேயாகும், (பெரியபுராணம்-திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் புராணம், பா-480.)

ஒரு துயரம்

திருவாளர். திவான்பகதூர். சர். தி. கெ. சிவஞானம்பிள்ளை B.A., அவர்களது பிரிவு :—நமது தமிழ் நாட்டினில் தன்னலமில்லாத் தகைமையாளராகப் பொதுமக்கள் தொண்டினிலீடுபடுபவரது குழுவிலிருப்பதற்கு உரியவராகிய நமது பெரியார், கி. பி. 1861-ஆம் ஆண்டினில் திருநெல்வேலி மாநாட்டிற்பிறந்து உரிய பருவத்தே கல்வியிற்றேர்ந்து 1882-ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கப் பணிபூண்டு தமக்குற்ற அரசியற்றுறையில் திறம் பெற முயன்று, துணைத் தண்டத்தலைவர் (Dy. Collecter) பதவி வரையிலுயர்ந்து திவான்பகதூர் என்ற பட்டமும் பெற்று, 1919-ஆம் ஆண்டினில் அரசாங்கவூழிய ஒய்வு பெற்றூர். பிறகு, அவர்கள் ஒய்வு நாட்களை வீணே கழிக்காமல், உலகத்தொண்டாற்றக் கருதியபோது, அவர்கள் திருநெல்வேலி வளநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றூர். மேலும் பொதுத் தொண்டில் சிறந்து விளங்கியதின் பயனுல், அவர்கள் சென்னை மாநில அரசாங்க சட்டசபை உறுப்பினராகி அதன் வளர்ச்சி நெறிப்பிரிவில் அமைச்சராக 1923—26வரையிலிருக்கும் பேறும் பெற்றூர்.

திருவாளர் பிள்ளையவர்கள் தமிழினிடத்து மிகவும் ஆர்வங் கொண்டவர்களாவார்கள்; அதைப்புரப்பவருள் அவர்களும் ஒருவராவர் என்பது வெள்ளிடை மலையாகும்: கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாவின்போதும், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் ஆண்டுவிழாவின் போதும், தமிழ்ப் புலவர்மாநாட்டின்போதும், திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்திற்கும் தலைவராக இருந்து தொண்டாற்றியதே இதற்குப் போதிய சான்றூகும்.

திரு பிள்ளையவர்கள்; பொறுமைக்கு உறைவிடமாகும். ஆரவாரம் இல்லாதவர்கள்; பெருந்தகைமை மிகுதியுங் கொண்டவர்கள். அவர்கள் நோய்வாய்ப்பட்டு கடந்த 1936-ஜூன்-13ம் நாள் யாவரும் வருந்த மண்ணுலகைவிட்டு விண்ணுடு புகக்கச் சென்றூர்கள். அவரது இன்னுயிர் இறையடி நீழலில் பேரின்பம் எய்துமாக.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய "ஆனி" நன்கொடை

திங்கள் நன்கொடை		ரூ.	அ.	ப.
திரு. க. நடராசன் B.A., B.L., (பங்குனி)	அவர்கள்	5	0	0
,, L. மார்க்கசகாயம்பிள்ளை B.A., (சித்திரை)	,,	3	0	0
ஆயுள் நன்கொடை				
,, ஆ. பொன்னுசாமிநாடார் அவர்கள் (ரூபாய் ஆயிரத்துக்கு 2-வது தவணை.)		50	0	0
ஆண்டு நன்கொடை				
,, அண்ணுசாமி நாய்க்கர் அவர்கள் மிராசுதார், பெருமாக்கநல்லூர்		25	0	0
,, T. A. பாலகிருஷ்ணபிள்ளை அவர்கள் Retired Head Accountant சேர்வைகாரன்தெரு		5	0	0